செ.வெ.எண்:42/மே நாள்: 24.05.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் சுய தொழில் தொடங்கவும் அதன் மூலம் பலருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திடவும் வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) என்ற திட்டத்தின் கீழ் 2016 -2017-க்கான விண்ணப்பங்கள் வழங்கப்படவுள்ளன.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் சுய தொழில் தொடங்கவும் அதன் மூலம் பலருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திடவும் வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) என்ற திட்டத்தின் கீழ் 2016 -2017-க்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள், உற்பத்தி தொடர்பான தொழில் தொடங்க அதிகபட்சம் ரூ.5.00 இலட்சமும், சேவை தொடர்பான தொழில் தொடங்கிட அதிகபட்சம் ரூ.3.00 இலட்சமும், வியாபாரம் தொடங்கிட அதிகபட்சம் ரூ.1.00 இலட்சமும் வங்கிக் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன்பெற ஆண் மற்றும் பெண் இருபாலரும் குறைந்தபட்சம் 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவும், 18 வயது பூர்த்தியடைந்தவராகவும் இருக்க வேண்டும். அதிகபட்ச வயது வரம்பு பொதுப் பிரிவினருக்கு 35 வயது வரை, சிறப்பு பிரிவினரான, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பெண்கள், முன்னாள் இராணுவத்தினர், மாற்று திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் ஆகியோர் 45 வயது வரை விண்ணப்பிக்கலாம். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1,50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் கடன்பெற "மாவட்ட தொழில் மையம், இராமநாதபுரம்"அலுவலகத்தில் இலவசமாக வழங்கப்படும் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து உரிய இணைப்புகளுடன் இரட்டை நகலில் மாவட்ட தொழில் மையத்தில் சமர்ப்பித்தால், தகுதியின் அடிப்படையில் பயனாளிகள் தேர்வுக்குழுவின் பரிசீலனைக்குப்பின் வங்கிக்கடன் பெற பரிந்துரை செய்யப்படுகிறது.

திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் மானியமாக வழங்கப்படும் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகள் வங்கியிலிருந்து கடன் அனுமதி பெற்றவுடன் அவர்களுக்கு 1 வார கால கட்டாய மேலாண்மை பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக்குப் பின் பயனாளிகள் தமது பங்க மூலதனமாக திட்ட முதலீட்டில் 10 % (சிறப்பு பிரிவினருக்கு 5% மட்டும்) வங்கியில் செலுத்தி மீதியுள்ள தொகை 90 % (சிறப்பு பிரிவினர் 95%) கடனுதவியாகப் பெற்றுக் கொள்ளலாம். அதன் பின்னர் வங்கிகளுக்கு திட்ட மதிப்பீட்டில் 25 % தமிழக அரசு மானியமாக விடுவிக்கும்.

மாற்றுத்திறனாளிகள் தமது பங்காக செலுத்தும் 5% திட்ட முதலீட்டு தொகை அவர்களுக்கு மாற்றுத் திறனாளிகள் துறையிலிருந்து பெற்று வழங்கப்படும்.

எனவே, தொழில் தொடங்க ஆர்வமுள்ள, தகுதியுள்ள இளைஞர்கள் உரிய சான்றுகளுடன் மாவட்ட தொழில் மையம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம், இராமநாதபுரம் அலுவலகத்தை நேரில அணுகி அல்லது (www.dicrmd.in) என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்தும் விண்ணப்பிக்கலாம் (தொலைபேசி எண்: 04567 230497)

எனவே வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு தொழிற் கடன் பெற்று சுயதொழில் துவங்கி பயனடைய வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**